**செய்தி வெளியீடு எண்: 781** **நாள்: 29.12.20121**

கூட்டுறவு சங்கங்களுக்கான மாநில ஆள் சேர்ப்பு நிலையம் பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் காலியாக உள்ள **3589** உதவியாளர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் பணியாளர்களை தேர்வு செய்வதற்கான எழுத்து தேர்வை **9.12.2012** அன்று நடத்தியது இதற்கான நேர்முகத் தேர்வு **28.12.2012** முதல் **01.01.2013** வரை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு, நேற்று **28.12.2012**க்கான நேர்முகத் தேர்வு நடத்தி முடிக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று **(29.12.2012)** பலத்த மழை, மோசமான வானிலை காரணமாக நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளவிருக்கும் விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள இயலாத சூழ்நிலை குறித்து தெரிவித்ததின் அடிப்படையிலும் மற்றும் தொடர் மழையின் காரணமாக சான்றிதழ் சரிபார்ப்பதற்கு போதிய இடமின்மை போன்ற இடர்பாடுகள் காரணமாகவும் **29.12.2012** முதல் **01.01.2013** முடிய நடைபெறவிருந்த நேர்முகத் தேர்வு அனைத்தும் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது.

எனவே, நேர்முகத் தேர்வில் கலந்து கொள்பவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவை தனியாக பின்னர் தெரிவிக்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துவதாக கூட்டுறவுச் சங்கங்களின் மாநில ஆள் சேர்ப்பு நிலையம் தெரிவிக்கிறது.

---

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**